| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **29/06/2024** | முதல் | **03/07/2024** |
| | அறிக்கை எண் : | **052/ 2024** | வெளியீட்டு நாள் : | | **28/06/2024** | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (23.06.2024 முதல் 27.06.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 03-07-2024- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/06 | 24/06 | 25/06 | 26/06 | 27/06 | தேதி | நாள்-1<br>29/06 | நாள்-2<br>30/06 | நாள்-3<br>01/07 | நாள்-4<br>02/07 | நாள்-5<br>03/07 |
| 0.3 | 0.1 | 0.8 | 1.2 | 0.7 | மழை (மி.மீ) | 1 | 0 | 10 | 12 | 8 |
| 39 | 37 | 36 | 37 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 34 | 35 | 34 | 33 |
| 27 | 27 | 26 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 25 | 24 | 24 |
| 6 | 6 | 6 | 6 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 6 | 8 | 8 | 8 |
| 61 | 64 | 67 | 64 | 83 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 60 | 57 | 56 | 55 | 56 | | 50 | 40 | 50 | 40 | 40 |
| 8 | 19 | 13 | 17 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 8 | 10 | 10 | 12 |
| மேற்கு | மேற்கு | வட மேற்கு | மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 1, 2 மற்றும் 3 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், வடமேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(28ஜூன்-11 ஜூலை 2024):

### மழைப்பொழிவு :

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.
05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 04-07-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

05-07-2024 - 11-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கொடிவகை காய்கறி பயிர், வெண்டை, கால்நடை.**

**கொடிவகை காய்கறி பயிர்:**

கொடி வகை காய்கறி பயிர்களில் பெண் பூக்களை அதிகரிக்க எத்ரல் 100 பிபிஎம் அதவாது 10 லிட்டர் தண்ணீரில் 1 மில்லி கலந்து 15 நாட்கள் இடைவெளியில் நான்கு அல்லது ஐந்து முறை தெளிக்க வேண்டும்.

பொதுவாக தெளிப்பு வேலைகளை நிலத்தில் போதுமான ஈரம் இருக்கும் போது மேற்கொள்ள வேண்டும்.

**வெண்டை:**

வெண்டை பயிரைத் தாக்கும் செந்நாவாய்ப் பூச்சியின் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இதன் காரணமாக தாக்கப்பட்ட காய்களின் விதைகள் நிறம் மாறியும், சுருங்கியும் காணப்படும். தாக்கப்பட் வயல்களில் ஹார்பேக்டர் காஸ்டாலிஸ் என்ற இறை விழுங்கிகளை விட்டு செந்நாவாய்ப்பூச்சியை கட்டுப்படுத்தலாம்.

மேலும் ஒரு ஏக்கருக்கு 600 மில்லி என்ற அளவில் பிவேரியாபேசியானா தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும்.

இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும். உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையை தொடர்பு கொண்டு ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தடுப்பூசி போடுதல் மிகவும் அவசியம் ஆகும்.